Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 3·50

சுடர்: 5 | பிரமோதூத ஸ்ரீ ஆடி மீ 19உ | சனிக்கிழமை | (04-08-1990) | ஹிஜ்ரி 1410 முஹர்ரம் பிறை 12 | கதிர்: 154

# வவுனியாவிலிருந்து வடக்கே முன்னேற அரசபடை திட்டம்?

## அறிவித்தபடி தாக்குதல் ஆரம்பம்

யாழ்ப்பாணம், ஆக. 4

வவுனியாவிலிருந்து வட பகுதி நோக்கி முன்னேற ஸ்ரீலங்கா அரச படைகள் திட்டமிட்டிருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது.

அந்தத் திட்டத்தை செயற்படுத்தும் வகையில் நேற்று முன்தினம் வியாழக்கிழமை முதல் இராணுவ நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டிருக்கின்றன. விமானத் தாக்குதல்களும் முடுக்கிவிடப்பட்டிருக்கின்றன.

இராணுவ நடவடிக்கைகளை செயற்படுத்துவதற்காக ஸ்ரீலங்கா அரச படைகள் நேற்று முன்தினம் வியாழக்கிழமை முதல் மூன்று நாள் ஊரடங்கு உத்தரவு பிறப்பித்திருந்தது தெரிந்ததே.

ஊரடங்கு அறிவிப்பு விடுக்கப்பட்டதன் பிரகாரம், தாக்குதல்கள் வியாழனன்றே ஆரம்பமானதாக அங்கிருந்து கிடைத்த செய்திகள் தெரி

(5 ஆம் பக்கம் பார்க்க)

## இந்திய சீனி, கிழங்கு இங்கு விற்பனையில்!

யாழ்ப்பாணம், ஆக. 4

இந்தியாவில் இருந்து வள்ளங்கள் மூலம் கொண்டு வரப்பட்ட சீனி, உருளைக்கிழங்கு, தீப்பெட்டி மற்றும் வெங்காயம் போன்றவை நேற்று யாழ்ப்பாணம், மானிப்பாய்ப் பகுதிகளில் விற்பனை செய்யப்பட்டன.

இந்தியாவிலிருந்து கொண்டு வரப்பட்ட சீனி கிலோ 39 ரூபாவாகவும், உருளைக் கிழங்கு கிலோ 75 ரூபாவாகவும், வெங்காயம் கிலோ 9 ரூபாவாகவும், தீப்பெட்டி 2 ரூபாவாகவும் விற்பனையாகின. (ஒ-10)

## விமானத் தாக்குதலினால் முல்லைத்தீவில் 5 பேர் பலி!

யாழ்ப்பாணம், ஆக 4

முல்லைத்தீவுப் பகுதியில் நேற்று பொம்மர்கள் மற்றும், அவ்ரோ விமானங்கள் பரவலாக நடத்திய குண்டு வீச்சுத் தாக்குதலில் 5 பேர் கொல்லப்பட்டனர். 2 பேர் காயமடைந்தனர்.

சம்பவம் நேற்று நடைபெற்றது.

வற்றாப்பளை, சிலாவத்துறை, அளம்பல் ஆகிய பகுதிகளில் இத் தாக்குதல்கள் இடம் பெற்றதாகக் கூறப்படுகிறது.

விமானத் தாக்குதலினால் சிலாவத்துறையில் 2 பேர் கொல்லப்பட்டனர். ஒருவர் காயமடைந்தார்.

அளம்பிலில் 3 பேர் உயிரிழந்தனர். ஒருவர் காயமடைந்தார். (உ-9)

## யாழ் நகர் குண்டு வீச்சில் படமாளிகை எரிந்து நாசம்

யாழ்ப்பாணம், ஆக. 4

யாழ்நகரில் நேற்றும் இராட்சத விமானம் குண்டுவீச்சு நடத்தியது. முற்பகல் 11.15 மணியளவில் நடத்தப்பட்ட குண்டுவீச்சில் ஹரன் படமாளிகை எரிந்து நாசமாகியது.

காலையில் ''அவ்ரோ', விமானங்கள் கோட்டைப் பகுதியில் பொதிகளைப் போட்டன. அதேசமயம் குண்டுத் தாக்குதலும் நடத்தப்பட்டது. [ஒ-10]

## பேராதனை மாணவர் எழுவரும் நேற்று விடுவிப்பு

யாழ்ப்பாணத்தில் இருந்து பேராதனை செல்லும் வழியில் தம்புள்ளையில் கைது செய்யப்பட்ட ஏழு பேராதனைப் பல்கலைக்கழக மாணவர்களும் நேற்றுக் காலை நாவல பொலீஸ் நிலையத்தில் வைத்து விடுதலை செய்யப் பட்டனர்.

கடந்த மாதம் 18ஆம் திகதி கைது செய்யப்பட்ட மாணவர்களான நொயல் றொபின்ஸ், நாகராசா செந்தில்ராஜன், சுதாகர் விஸ்வலிங்கம், தியாகராசா ஆனந்தராசா, கைலாயர் ரமேஸ், ஆர். தயானந்தராசா, அரியபுத்திரன் பாலகிருஷ்ணன் ஆகியோரே விடுதலையானவர்கள். (ஒ-3)

## பயணிகள் அனுமதிப்பத்திரம்; புதிய நடைமுறை அமுல்

யாழ்ப்பாணம், ஆகஸ்ட் 4

குடாநாட்டிலிருந்து வெளியே செல்பவர்களுக்கான அனுமதிப்பத்திரம் ('பாஸ்') வழங்குவதி'' பயணிகளின் வசதி கருதி புதிய நடவடிக்கைகள் ஏற்படுத்தப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

விடுதலைப் புலிகளின் பயணிகள் போக்குவரத்து தொடர்பக பொறுப்பாளர் திரு. சலீம் நேற்று நடைபெற்ற பத்திரிகையாளர் மாநாட்டில் புதிய நடைமுறைகள் பற்றிவிளக்கினார்.

★ பூநகரி உதவி அரசஅதிபர் பிரிவைச் சேர்ந்தோர் அடிக்கடி குடாநாட்டுக்கு வந்து செல்ல வேண்டிய அவ்

(5 ஆம் பக்கம் பார்க்க)

## யுனிசெப் மூலம் 6 கோடி ரூபா தமிழ் பகுதி மக்களுக்கு உதவி

கொழும்பு, ஆக. 4

வடக்கு - கிழக்கு யுத்தத்தில் பாதிக்கப்பட்டவர்களுக்கு உதவுவதற்காக நட்பு நாடுகளிடமிருந்து 6 கோடி ரூபா யுனிசெப் நிறுவனத்திற்குக் கிடைத்துள்ளது.

இதனை நிறுவன பிரதிநிதி ஒருவர் உறுதிப்படுத்தினார்.

அமெரிக்கா யுனிசெப் இலங்கை கிளைக்கு 2 கோடி ரூபாவை அன்பளிப்பாக வழங்க சம்மதித்துள்ளது.

ஏற்கனவே ஜப்பான் 2 கோடி ரூபாவும் ஆஸ்திரேலியா 25 லட்சம் ரூபாவும் பிரிட்டன் 78 ஆயிரம் டொலரையும் யுனிசெப் தலைமைக் காரியாலயம் 60 ஆயிரம் டொலரையும் யுனிசெப் இலங்கைப் பிரிவுக்கு வழங்கியுள்ளன. (உ-எ)

## முச்சந்தி முரளி



வத்தையளிலை இந்தியாவில் இருந்து சாமான்கள் வந்த காலம் முந்தியும் இருந்ததுதானே... இதுவும் ஒரு சுழற்சி!

## அன்பார்ந்த வாசகர்களே!

பத்திரிகைக் காகிதத்திற்குப் பெரும் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது. அதனால் உதயனின் அமைப்பை மனத்தயக்கத்துடன் மாற்ற வேண்டிய கட்டாயத்துக்கு ஆளாகிவிட்டோம்.

எனினும் தனது வழமையான தரத்திலும், பொலிவிலும் குன்றாமல் வாசகர்கர்களுக்கு வேண்டிய அம்சங்களை அவன் தருவான். நிலைமை சீரானதும் முந்திய பொலிவுடன் உதயன் வெளிவருவான்.

அதுவரை வாசகர்களை பொறுத்திருக்க வேண்டுகிறோம்.

- நிர்வாகத்தினர்

## பரந்தனில் ஷெல் தாக்கி 3 போராளிகள் மரணம்

பரந்தன் பகுதியில் முகாம் இட்டுள்ள இராணுவத்தினர், கடந்த வியாழன் இரவு மேற்கொண்ட ஷெல் தாக்குதலினால் விடுதலைப் புலிகள் இயக்கப் போராளிகள் மூவர் வீரமரணமடைந்தனர்.

சிவன் (உருத்திரபுரம்), மெண்டிஸ் (சாவகச்சேரி). ஜெனன் (குஞ்சுக்குளம்) ஆகியோரே உயிரிழந்தவர்களாவர்.

இதேதினம் பரந்தன் முகாமுக்கு அண்மையில் உள்ள தமது வீட்டை பார்க்கச் சென்ற சுப்பிரமணியம் சண்முகம் (வயது 40) என்பவர் இராணுவத்தினால் சுட்டுக் கொல்லப்பட்டதாக கூறப்பட்டது. (உ-9)

## தினசரி நடக்கும் தாக்குதல்

பரந்தன் இராணுவ முகாமில் இருந்து முகாமை அண்டிய பகுதிகளை நோக்கி தினமும் இரவு பகல் வேளைகளில் இடையிடையே ஷெல் தாக்குதல்கள் நடத்தப்படுகின்றன.

குமரபுரம், பரந்தன் விவசாயப் பண்ணை, 5ஆம்வாய்க்கால், கரடிப்போக்கு. கைவிடப்பட்ட கிளிநொச்சி இராணுவமுகாம் பகுதிகளிலேயே ஷெல்கள் வீழ்ந்து வெடிக்கின்றன. (ஒ-76)

## இன்று வரும் கப்பலில் 200 தொன் பொருள்களே!

யாழ்ப்பாணம், ஆக. 4

பருத்தித்துறைக்கு இன்று காலை வந்து சேரவுள்ள கப்பலில் இருந்து உணவுப் பொருள்கள் இறக்கும் வேலைகள் உடனடியாக ஆரம்பிக்கப்படும்.

இந்தக் கப்பலில் அரசினால் அனுப்பப்படும் 157 தொன் உணவுப் பொருள்களும், போருட் தலைமையகத்தில் இருந்து 22 தொன் உணவுப் பொருள்களும், சுகாதார அமைச்சிடம் இருந்து 17 தொன் மருந்து, திரிபோஷா ஆசியனவும் மற்றும் செஞ்சிலுவைச் சங்கம், செஞ்சிலுவைச் சங்க சர்வதேசக் குழு ஆகியவற்றுக்கு ஒரு தொகுதி பொருள்களும் வருகின்றன.

295 பொதிகளில் உள்நாட்டு, வெளிநாட்டு தபால்களும் இந்தக் கப்பலில் எடுத்துவரப்படுகின்றன. (உ-3)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சின்னஞ்சிறு விளம்பரம்

### Typewriters

தட்டச்சு இயந்திரங்கள் வாங்கவும் விற்கவும் சிறந்த முறையில் திருத்தவும் மற்றும் தமிழ் ஆங்கிலம் ரைப்பிங் செய்துகொடுக்கவும் Fudo Enterprises (Shiva Studio Upstair) Jaffna Road, Manipay. (சி-5289)

### தவறிவிட்டது

பத்திநாதர் பிறின்சிலி பயஸ் 601581280V இலக்க முடைய அடையாள அட்டை யாழ்ப்பாணத்திற்கும் - பண்டத்தரிப்பிற்கும் இடையில் தவறி விட்டது. எடுத்தவர்கள் உதயன் காரியாலயத்தில் ஒப்படைக்கவும். சன்மானம் வழங்கப்படும்.

(13982)

யாழ்ப்பாணத்தைச்சேர்ந்த குமாரசாமி தர்மராஜா என்பவரின் அடையாள அட்டை இல. 403061735V தவறி விட்டது. கிடைத்தவர்கள் தயவு செய்து உதயன் காரியாலயத்தில் ஒப்படைக்கவும்.

(13977)

### தேவை

உங்கள் வளவுகளில் இருக்கும் பட்ட மரங்கள் விறகு விலைக்கு கொள்வனவு செய்யப்படும். விபரங்களுக்கு 271, கச்சேரி நல்லூர் றோட், நல்லூர். (13983)

### ஸ்ரார் வாச் வேக்ஸ்

ஸ்ரார் வாச் வேக்ஸ்சில் திருத்தம் செய்யக்கொடுத்த மணிக்கூடுகளை வாடிக்கையாளரின் நன்மை கருதி காலை 9.00 மணி தொடக்கம் 12 மணிக்கிடையில் பெற்றுக்கொள்ளுமாறு கேட்டுக் கொள்கிறோம். தொடர்பு: க. பரமேஸ்வரன், 399, கஸ்தூரியார்வீதி, யாழ்ப்பாணம்

(13979)

### திங்கள் வந்த கப்பலில்

# 2 லட்சம் தீப்பெட்டிகள் 6 லட்சம் மெழுகுதிரிகள்

யாழ்ப்பாணம், ஆகஸ்ட் 4

பருத்தித்துறைக்கு கடந்த திங்களன்று வந்து சேர்ந்த ''சிகிரியா'' கப்பலில் இருந்து இரண்டு லட்சம் தீப்பெட்டிகளும், ஆறு லட்சம் மெழுகுதிரிகளும் கொண்டு வரப்பட்டுள்ளன. இவை நேற்று முன்தினம் கப்பலில் இருந்து இறக்கப்பட்டன. [உ-3]

# திறந்த பல்கலை மாணவர் பரீட்சையை பகிஷ்கரிக்க முடிவு

யாழ்ப்பாணம், ஆக.4

இலங்கை திறந்தபல்கலைக்கழக யாழ்-பிராந்திய நிலையத்தில் இன்று சனிக்கிழமை ஆரம்பமாகும் இறுதிப்பரீட்சைகளைப் பகிஷ்கரிப்பதென நேற்று மாணவர்கள் கூடி முடிவெடுத்தனர்.

தற்போது நாட்டில் நிலவும் யுத்த நிலைமை, சீரழிவுகள் காரணமாக பரீட்சைகளைப் பகிஷ்கரிப்பதென நேற்றைய கூட்டத்தில் முடிவு செய்யப்பட்டது. (இ-3)

# 144 வெளிநாட்டவரும் நாளை கப்பலில் கொழும்புக்கு

யாழ்ப்பாணம், ஆக. 4

யாழ்ப்பாணத்தில் உள்ள 144வெளிநாட்டுபாஸ்போர்ட்சாரர்கள் நாளை ஞாயிற்றுக்கிழமை கப்பல் மூலம் கொழும்புக்கு அனுப்பப்பட உள்ளனர்.

இங்கு வந்த பின்னர் கொழும்புக்கு திரும்ப முடியாது இருந்த வெளிநாட்டவர்களும், வெளிநாட்டுப் பாஸ்போர்ட் வைத்திருக்கும் இலங்கையர்களும் இதில் அடங்குவர்.

செஞ்சிலுவைச் சங்க சர்வதேசக் குழுவின் ஏற்பாட்டிலேயே இவர்கள் அனுப்பப்படுகின்றனர். [இ-3]

# ஆசிரிய இடமாற்றம் ஒத்திவைக்கப்பட்டது

யாழ்.மாவட்டத்தில் உள்ள கல்விக்கோட்ட மட்டத்தில் கடந்த ஜூன் மாதம் முதலாம் திகதிமுதல் அமுலுக்கு வரவிருந்த ஆசிரியர்கள் இடமாற்றம்காலவரையறையின்றி ஒத்திவைக்கப்பட்டது.

யாழ் கல்விப்பணிப்பாளர் திரு. இ. சுந்தரலிங்கம் இதனைத் தெரிவித்தார் [இ-3]

# இங்கு கையளித்த மகஜர் ஐ.நா. ஆணைக்குழுவுக்கு

யாழ்ப்பாணம், ஆக. 4

வடக்கு -கிழக்கு மாகாணத்தில் தமிழர் கொலை செய்யப்படுவது நிறுத்தப்பட வேண்டும் என்றும் அகதிகளுக்கு உரிய பாதுகாப்பு வழங்கப்பட வேண்டும் என்றும் தமிழ் மாநில அகதிகள் பாதுகாப்பு மன்றம் விடுத்த கோரிக்கை ஐ நா. மனித உரிமைகள் ஆணைக்குழுவுக்கு அனுப்பப்படும்.

தமிழ் அகதிகள் பாதுகாப்பு மன்றம், கடந்த முதலாம் திகதி, ஐந்து அம்சக் கோரிக்கை கொண்ட மகஜர் ஒன்றை யாழ்ப்பாணத்தில் உள்ள ஐ. நா. அகதிகள் ஸ்தானிகராலயத்திடம்சமர்ப்பித்திருந்தது தெரிந்ததே.

அந்த மகஜர் கொழும்பில் உள்ள ஐ நா. அகதிகள் ஸ்தானிகராலயத்துக்கு அனுப்பப்பட்டது பிரஸ்தாப மகஜரை ஐ நா. மனித உரிமைகள் ஆணைக்குழுவுக்கு அனுப்ப நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக கொழும்பிலிருந்து யாழ்ப்பாணத்துக்கு நேற்றுத் தகவல் தெரிவிக்கப்பட்டது.

அகதிகள் பாதுகாப்பு மன்றத்தின் மகஜரை ஜெனிவாவில் உள்ள சர்வதேச செஞ்சிலுவைச் சங்கத் தலைமையகத்துக்கு அனுப்பவும் நடவடிக்கை எடுக்கப்படவுள்ளதாக அறியப்படுகிறது. (அ-3)

# குவைத்தில் 80 ஆயிரம் இலங்கையர்

கொழும்பு, ஆக. 4

குவைத் நாட்டில் தற்சமயம் சுமார் 80 ஆயிரம் இலங்கைப் பிரசைகள் தொழில் புரிந்து வருகிறார்கள் என்று கொழும்பில் வெளியுறவு அமைச்சு வட்டாரங்கள் தெரிவித்தன.

இவர்களில் பெரும்பாலானவர்கள் வீட்டுப் பணிப்பெண்களாக தொழில் வாய்ப்புப் பெற்றுச்சென்றவர்கள் என்று தெரிவிக்கப்படுகிறது.

இலங்கைப் பிரசைகள் அனைவரும் பாதுகாப்பாக இருப்பதாக நேற்று இலங்கை அரசு அறிவித்தது. (இ-எ)

## காணவில்லை

கல்முனை அன்பு ஸ்ரோர் உரிமையாளர் திரு. கந்தையா நடராசாவும் அவரது மகன் ந. கிரிதரன் (யாழ். பல்கலைக்கழக மாணவன்) கந்தையா வேலாயுதபிள்ளை (ஓய்வு பெற்ற தொழில் நுட்ப உத்தியோகஸ்தரும் - சமாதான நீதவான்) ஆகியோரின் தகவல்கள் ஒன்றரை மாத காலமாக ஒன்றும் தெரியவில்லை. இவர்களின் விவரம் தெரிந்தால் யாராவது உடனடியாக பலாலி றோட், இராமகிருஸ்ணா லேன், கோண்டாவில் கிழக்கில் உள்ள இராசையா-பாலசுப்பிரமணியத்திற்கு அறியத்தரவும்.

தகவல்:

இராசையா - பாலசுப்பிரமணியம்

கோண்டாவில். [13980]

# 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும்

அமரர்

## கனகசபை இரத்தினசபாபதி [இரத்தினம்]

அன்னையின் மடியில்: 1 - 9 - 1914

ஆண்டவன் அடியில்: 5 - 7 - 1990

அன்பின் திருவுருவாய் எங்கள் குடும்பத்தின் ஒளி விளக்காய் வாழ்வின் வழிகாட்டியாய் வாழ்ந்து எமை விட்டு நீங்கி மீளாத்துயில் கொண்ட அன்புத் தெய்வமே! உங்கள் நினைவுகள் எம் நெஞ்சங்களை விட்டு என்றும் அகலாது.

அன்னாரின் இறுதிக் கிரியைகளில் கலந்து கொண்டு எமது துக்கத்தில் பங்குகொண்ட அனைவர்க்கும் நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றோம் அன்னாரின் ஆத்மா சாந்திக்காகப் பிரார்த்திக்கும்

மனைவி, மக்கள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

114/2, கோவில் வீதி,
நல்லூர். [13989]

## அரசாங்க அறிவித்தல்

சுகாதார வைத்திய அதிகாரிபணிமனை கிளிநொச்சியில் வெளிக்கள குடும்பநல சேவையாளராக கடமையாற்றும் திருமதி யோகேஸ்வரி உடனடியாக சுற்றயல்கூறு அக்கராயன்குளத்தில் கடமையை பொறுப்பேற்குமாறு வேண்டப்படுகிறார்.

ந. கனகசபை
சுகாதார சேவைகள் பிராந்தியப் பணிப்பாளர், யாழ்ப்பாணம்.

(சி/5299)

## சிவாச்சாரியபிஷேகம்

### (குருப்பட்டமளிப்பு விழா)

### 04 — 07 — 1990 நடைபெற்றது

காரைநகர் தங்கோடையை சேர்ந்த அமரர் சிவஸ்ரீ கணபதீஸ்வரக் குருக்களின் பூட்டனும், பொன் சுப்பிரமணியக் குருக்களின் மகனும், தெல்லிப்பழை துர்க்கா தேவி தேவஸ்தான உதவி அர்ச்சகருமாகிய பிரம்மஸ்ரீ S. புனிதராஜ சர்மா (கண்ணன்) ற்கு துர்க்காதேவி தேவஸ்தானத்தில் துர்க்கா வேதாகமா பாடசாலையின் ஆதரவுடன் மாவிட்டபுரம் ஐ.வைத்திநாதக் குருக்கள் தீட்சா குருவாகவும், துர்க்கா வேதகம பாடசாலை அதிபர் விஸ்வநாரயண சர்மா உபாத்தியாயராகவும் இருந்து சிவாச்சாரியபிஷேகம் நடைபெற்றது. தேவஸ்தான தலைவர் சிவத் தமிழ் செல்வி தங்கம்மா அப்பாக்குட்டியின் நல் வாழ்த்துடனும், தேவஸ்தான பிரதான சிவாச்சாரியர் S. சுந்தரேஸ்வரக் குருக்களின் நல்லாசியுடனும் விழா இனிதே நடைபெற்றது.

சுபம்

சிவஸ்ரீ பொன்சுப்பிரமணியக்குருக்கள்,
தங்கோடை,
காரைநகர்.

[13981]

## இரண்டாம் வருட நினைவஞ்சலி



## செல்வி மாதங்கி சிவசுப்பிரமணியம்

மலர்வு: 06-08-1980

உதிர்வு: 04-08-1988

அன்பான செல்வமே!
எட்டாண்டுகள் எம்மை மகிழ்வித்து எட்டாத இடத்தை எட்டி விட்டாய். உங்கள் பிரிவைத் தாங்காது நித்தம் துயரத்தால் வாடுகிறோம். எதிலும் உங்கள் நினைவு. எப்படியம்மா தாங்குவோம்.

ஆத்ம சாந்திக்சாக எல்லாம் வல்லவனை இறைஞ்சுகின்றோம்.

நினைவால் துடிக்கும்

அப்பா, அம்மா, அக்கா, மற்றும் உறவினர்கள்.

'' நித்திலம் ''
K.K.S வீதி,
இணுவில். (C/5298)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உதயன்

## உலகம் எடைபோடட்டும்

யாழ்ப்பாணக் குடாநாட்டில், இராணுவத் தாக்குதல்கள் நாளாந்தம் விஸ்தாரம் அடைந்து வருகின்றன. இராணுவ முகாம்களை அண்டியுள்ள - விடுதலைப் புலிகள் நிலைகொண்டுள்ள - பகுதிகளையும் கடந்து, தாண்டி மக்கள் செறிந்து வாழும் பகுதிகளில் வான் கடற்படைகளின் தாக்குதல்கள் தீவிரமடைந்து வருகின்றன.

அதன் விளைவாக அப்பாவிப் பொதுமக்கள் மட்டுமன்றி, அவர்கள் மனநிம்மதி வேண்டி வழிபடும் வணக்கஸ்தலங்களும் பாதிக்கப்படுகின்றன.

வழிபாட்டு ஸ்தலங்கள், அவை எந்தச் சமயத்தைச் சேர்ந்தவையாக இருந்தாலும் புனிதமானவையும், உயர்ந்த இடத்தில் வைத்துப் போற்றப்படுபவையும் ஆகும்.

ஆனால் வானப்படையினரும், கடற்படையினரும் அவற்றை எல்லாம் பொருட்படுத்தாமல், மனதில் கொள்ளாமல், ஆலயங்கள், தேவாலயங்களைத் தாக்கிச் சேதமாக்கி வருகிறார்கள்; இந்து, கிறிஸ்தவ மதங்களை அவமதிக்கிறார்கள்; அவற்றில் இறைவணக்கம் செய்து, துதித்துப் பூசிப்பவர்களைப் புண்படுத்துகிறார்கள். மக்களை அழிக்கப்போகிறோமாம், கோவில்கள் மட்டும் எதற்கு? - என்று நினைத்துவிட்டார்கள் போலும்!

வற்றாப்பளையில், வல்வெட்டித்துறையில், கிளிநொச்சிப்பகுதியில் பல இந்து ஆலயங்கள் சேதமாக்கப்பட்டுள்ளன. யாழ்நகரில் ஆசனக்கோவில் சேதமாக்கப்பட்டுள்ளது. கிழக்கிலும் பல இந்து ஆலயங்களுக்கு இதேகதி நேர்ந்துள்ளது. இந்த ஆலய அழிப்புகள் இனஒழிப்புக்கு துணைக்கட்டமான பண்பாட்டுப் படுகொலைகளாகும்.

வரலாற்றுச் சிறப்புமிக்க திருகோணமலை கோணேசர் ஆலயப் பக்கமே சைவத் தமிழ் மக்கள் இன்று காலடி எடுத்துவைக்க முடியாத நிலையை சிங்கள, பௌத்த பேரினவாத சக்திகள் உருவாக்கி இருக்கின்றன.

தமிழ்மக்கள் கொலையும், அவர்தம் பண்பாட்டுப் படுகொலையும் சமகாலத்தில் நடத்தப்படவேண்டும் என்று அரசு திட்டமிட்டு செயற்படுவதையே இந்தத் தாக்குதல்கள், நடவடிக்கைகள் எடுத்துக் காட்டுகின்றன.

இது இன்று நேற்றல்ல, கொழும்பு அரசுகளும் அதன் தலைமைகளும் சிங்கள, பௌத்த பேரினவாதத்தில் ஊறித் திளைத்து மதிமயங்கிய நாட்களில் இருந்து, முளைவிட்டு, இலைவிட்டு கிளைபரப்பி, பூத்துக் காய்த்து, இப்போது கனிந்து கொண்டிருக்கிறது!

ஆனால் காலத்துக்குக் காலம் சிங்கள அரசுகள் ஈழத் தமிழரின் இன உணர்வோடு மத உணர்வையும் அழிக்க எடுத்த முயற்சிகள் தோற்றுப் போனதை வரலாறு வெளிப்படுத்தி நிற்பதை யாவரும் அறிவர்.

வடக்கு- கிழக்கு யுத்தம் ஆரம்பித்த ஒருசில நாட்களில் கண்டியில் உரையாற்றிய ஜனாதிபதி 'இப்போது நடக்கும் யுத்தம் நாகரிகம் உள்ள மக்களுக்கும், நாகரிகம் இல்லாத மக்களுக்கும் இடையில் நடக்கும் யுத்தம்'' என்று கூறியிருந்தார்.

அப்பாவி மக்களை மட்டுமன்றி ஆலயங்களையும் அழிக்கும் சாரார் எந்த ரகத்தினர் என்பதை உலகம் இனி எடைபோடட்டும்!

## உணவுப் பொருள் தயாரிப்பு

கொழும்புத்துறை, ஆ. 4

மூளாய் சிறுவர் பாடசாலை ஆசிரிய பயிற்சி நிலையம் தற்போதைய போர்க்கால சூழ் நிலையை முன்னிட்டு உணவுப் பொருள் தயாரிப்பில் ஈடுபட்டுள்ளது.

ஜீவாகாரம், உப்பு மிளாய், ஊறுகாய், உழுத்தம் மா தயாரிப்பதுடன் தேங்காய் எண்ணெய் உற்பத்தியிலும் ஈடுபட்டுள்ளது. (ஒ-30)

## மக்கள் அச்சம்

யாழ்ப்பாணம், ஆக 4

காரைநகர் கடற்படை முகாமை அண்டிய பகுதிகளில் தரித்துநின்று கிராமபகுதி மக்களை நோக்கி வேட்டுக்களைத் தீர்த்த படகுகள் தற்போது தீவுப் பகுதிக் கடற் பகுதியில் தரித்து நிற்பதால் கரை ஓரங்களில் வாழும் மக்கள் அச்சமடைந்துள்ளனர். (இ - 3)

## கூட்டம்

கொழும்புத்துறை, ஆக. 4

யாழ். மாவட்ட இந்து இளைஞர் பேரவையின் விஷேட ஆட்சிக் குழுக் கூட்டம் இன்று சனிக்கிழமை காலை பத்துமணிக்குப் பேரவைத் தலைவர் திரு. வே. கெ தனபாலன் தலைமையில் நல்லூர் மங்கையற்கரசி வித்தியாசாலயில் நடைபெறும். (ஒ-30)

## பண்பாட்டு இயக்கத்தின் கூட்டம்

கொழும்புத்துறை, ஆக. 4

உலகத் தமிழ் பண்பாட்டு இயக்கத்தின் இலங்கை கிளையின் விசேட ஆட்சிக் குழுக் கூட்டம் இன்று சனிக்கிழமை நண்பகல் 12 மணிக்கு நல்லூர் மங்கையற்கரசி வித்தியாலயத்தில் நடைபெறும்.

அகதிகள் நிவாரணப் பணி குறித்து இந்தக் கூட்டத்தில் ஆராயப்படும் எனத் தெரிவிக்கப்பட்டது. (உ-30)

# யாழ்ப்பாண மக்களின் அவலநிலை விளக்கி அரச அதிபர் அறிக்கை

யாழ்ப்பாணம், ஆக, 4

யாழ்ப்பாணமக்களின் அவலநிலையை விளக்கி யாழ் அரச அதிபர் கொழும்புக்கு அறிக்கை ஒன்றை அனுப்பி வைத்திருக்கிறார்.

இந்த அறிக்கை யாழ் அரச அதிபரினால் கொழும்பில் உள்ள அத்தியாவசிய சேவைகள் நாயகம் திரு சரித்தரத்வத்தைக்கு அனுப்பப்பட்டிருக்கிறது.

இருவாரங்களுக்கு ஒரு தடவை அவர் இங்குள்ள நிலைமைகள், சேதங்கள் குறித்து அறிக்கை அனுப்பி வருவதாகத் தெரிவிக்கப்பட்டது.

அவர் கடைசியாக அனுப்பியுள்ள அறிக்கையில் கூறப்பட்டிருப்பதாவது:-

யாழ் மாவட்டத்தில் பல இடங்களில் மக்களின் குடியிருப்புகள், வீடுகள், கடைகள் மற்றும் கட்டடங்கள் விமானக்குண்டுவீச்சால் அழிக்கப்பட்டுள்ளன.

யாழ் மக்கள் தமது உடைமைகளை இழந்த நிலையில் உடல், உளரீதியில் பாதிக்கப்பட்டு, தமது அன்றாடவாழ்க்கையை நடத்த முடியாத அவலநிலையில் இருக்கின்றனர்.

உயிரிழந்தோர், காயமடைந்தோர் எண்ணிக்கை மிக அதிகம்.

செயலகங்கள், அரச திணைக்களங்கள் இயங்குவதில்லை; பாடசாலைகள் மூடப்பட்டுள்ளன; ஊழியர்கள் பயத்தாலும், போக்குவரத்து வசதியின்மையாலும் கடமைக்குச் சமுகமளிக்கமுடியாத நிலையில் உள்ளனர்.

அகதிகள் எண்ணிக்கை நாளுக்குநாள் அதிகரித்தவண்ணமேயுள்ளது.

இங்கு குடாநாட்டுமக்களுக்குத் தேவையான உணவுப் பொருள்கள்கூட இல்லை. அத்துடன் அகதியாக வெளிமாவட்டங்களில் இடம் பெயர்ந்து வந்தோரும் சேர, உணவுப்பற்றாக்குறைமேலும் அதிகரித்துவிட்டது.

தேசிய சேமிப்பு வங்கி, மக்கள்வங்கி, அரசாங்க செயலகம் உட்பட அரச திணைக்களங்களின் கட்டடங்களும் சேதமடைந்துள்ளன. நகரில் உள்ள பல கடைகள் தரைமட்டமாக்கப்பட்டுள்ளன.

நடுத்தரமக்கள் தொழில் இன்றிக் கஷ்ட நிலையில் உள்ளனர்; அன்றாடம் உழைத்து குடும்பம் நடாத்திவந்தவர்களும் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளனர்.

எந்த நேரத்தில் என்னநடக்குமோ என்ற பயத்தினால் மக்கள் அன்றாட வாழ்க்கை சீரழிந்த நிலையில் சொல்லொணாக் கஷ்டத்தின் மத்தியில் உள்ளனர்.

- இவ்வாறு அரச அதிபர் தமது அறிக்கையில் தெரிவித்திருக்கிறார். [உ-3]

## குடிதண்ணீர் விநியோகம் தடை

யாழ்ப்பாணம், ஆக. 4

மின்சாரம் கிடைக்காததாலும், எரிபொருள் தட்டுப்பாட்டாலும் வேலணை, புங்குடுதீவு ஊர்காவற்றுறைப் பகுதிகளில் குடிதண்ணீர் விநியோகம் தடைபட்டுள்ளது.

யாழ். செஞ்சிலுவைச் சங்கம் வழங்கிய டிராக்டருக்கு எரிபொருள் இல்லாததால் அத்துடன் இணைந்துள்ள தண்ணீர் விநியோகிக்கும் பவுசரும் பயன்படுத்த முடியாத நிலையில் இருந்து வருகிறது. (இ-3)

## இளம் எழுத்தாளர்களுக்கு ஊக்கம்தந்து இனங்காட்டியவர்

### சசிபாரதிக்கு நந்தி பாராட்டு

யாழ்ப்பாணம் ஆக. 4

இன்று பிரபல எழுத்தாளர்கள், இலக்கியவாதிகளாக இருக்கும் பலர் ஒரு காலத்தில் சசிபாரதியினால்தான் இலக்கிய உலகிற்கு அழைத்து வரப்பட்டார்கள். இயல்பாகவே அன்பு உள்ளம்கொண்ட சசிபாரதி, இளம் எழுத்தாளர்களை ஊக்குவித்து, அவர்களைச் சமூகத்திற்கு இனங்காட்டியவர்.

இவ்வாறு கடந்த ஞாயிறு காலை நல்லூர் திருஞானசம்பந்தர் ஆதீனத்தில் நடைபெற்ற சசிபாரதி சு. சபாரத்தினத்தின் 60 ஆவது ஆண்டு நிறைவை ஒட்டிய இலக்கியச் சந்திப்பில் பேசிய பேராசிரியர் நந்தி குறிப்பிட்டார்.

பத்திரிகையாளர் விவேக் தலைமையில் நடந்த மேற்படி சந்திப்பில் ஈழத்தின் பிரபல இலக்கிய கர்த்தாக்கள், பத்திரிகையாளர்கள், அறிஞர்கள் ஆகியோர் கலந்து கொண்டனர்.

நல்லை ஞானசம்பந்தர் ஆதீன குரு மகா சந்நிதானம் சோமசுந்தர பரமாச்சாரிய சுவாமிகள், சசிபாரதிக்கு பொன்னாடை போர்த்தி ஆசியுரை வழங்கினார். யாழ். மாநகரசபை ஆணையாளர் திரு.பொ. பாலசிங்கம் மாலை அணிவித்து வாழ்த்தினார்.

பேராசிரியர் நந்தி மேலும் பேசுகையில், திரு சசிபாரதி, இலக்கியவாதிகளை, எழுத்தாளர்களை தமது அலுவலகத்தில் புன்முறுவலோடு வரவேற்று அழைத்துச் செல்லும் பண்பு நிறைந்தவர். குழந்தை உள்ளத்தோடு நடமாடிய அவர், இலக்கியத்தை மட்டுமன்றி இலக்கிய கர்த்தாக்களையும் ரசிப்பவர் — என்றார்.

இலக்கியத்துறையில் எதிரிகளே இல்லை என்ற அளவுக்கு, இலக்கிய வளர்ச்சிக்காக, எழுத்தாளர்களின் முன்னேற்றத்துக்காக, ஊக்கம் அளிக்கும் நண்பராகவே சசிபாரதி பலருக்கு விளங்கினார். - என்று திரு. செங்கை ஆழியான் குறிப்பிட்டார்.

எழுத்தாளர் ஐ சாந்தன் தனது வாழ்த்துரையில் —

சிறந்த ஒரு இலக்கியப் படைப்பின் தரம் அதன் நீள அகலத் தன்மைகளைக் கொண்டோ அல்லது அதன் இலக்கிய வடிவத்தைக் கொண்டோ உயர்ந்ததாக அமைந்து விடுவதில்லை.

இலக்கியத்தின் நோக்கை எய்துவதிலேயே ஓர் ஆக்கத்தின் தரம் உயர்ந்து நிற்கிறது. —

அந்த வகையில் மூத்த பத்திரிகையாளரும் எழுத்தாளருமான சசிபாரதியின் எழுத்துக்கள் வழமையான வடிவங்களை விட வித்தியாசமானவையாகவும் இலக்கியத்தின் நோக்கை நிறைவேற்றுவனவாகவும் அமைந்தவை என்றார்.

மல்லிகை ஆசிரியர் திரு. டொமினிக் ஜீவா, திரு. எ.ரீ. பொன்னுத்துரை, கம்பன் கழக அமைப்பாளர் திரு.இ. ஜெயராஜ், கவிஞர் காரை. சுந்தரம்பிள்ளை, அறிஞர் க. சி. குலரத்தினம் உதயன் - சஞ்சீவி பிரதம ஆசிரியர் திரு ம. வ. கானபயில்நாதன். ஈழநாதம் வாரமலர் ஆசிரியர் திரு. ராதேயன் ஆகியோரும் வாழ்த்துரை வழங்கினர்.

'' குறுங்கதைகளும் சசிபாரதியும்'' என்னும் தலைப்பில் கவிஞர் சாள்ஸ்ஸும் 'குறுங்கதைகளின் இலக்கிய அந்தஸ்து' என்னும் தலைப்பில் செங்கை ஆழியான், செம்பியன் செல்வன் ஆகியோரும் சிறப்புரை வழங்கினர். (அ-5)

## ஈழத் தமிழ் அகதிகள் நடமாடக் கட்டுப்பாடு

சென்னை, ஆக 4

தமிழகத்தில் அகதி முகாம்களில் உள்ள ஈழத் தமிழ் அகதிகள் வெளியில் கண்டபடி நடமாடத் தடை விதிக்கப்பட்டுள்ளது.

ஒவ்வொருவரும் தங்களுக்கென ஒழுங்கு செய்யப்பட்டுள்ள முகாம்களிலேயே தங்கியிருக்க வேண்டும் என்றும்—

அவர்களுக்குத் தேவையான பொருள்களை முகாம் பணிப்பாளர்களே வாங்கிக் கொடுப்பார்கள் என்றும் அறிவுறுத்தப்பட்டிருக்கின்றதாம்.

சரியான ஆதாரம் காட்டினால் ஒருமணி நேரம் வெளியே செல்ல அனுமதி வழங்கப்படும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளதாம். [உ-3]

## பணம் மாற்ற விசேஷ வங்கி

யாழ்ப்பாணம், ஆக. 4

தமிழகத்தில் உள்ள இலங்கைத்தமிழ் அகதிகள் பணம் மாற்றுவதற்கு விசேஷ வங்கி ஒன்று இராமேஸ்வரத்தில் அமைக்கப்பட்டுள்ளது.

இங்கிருந்து செல்லும் அகதிகளிடம் 100 ரூபா இலங்கை பணத்துக்கு 30 ரூபாவே வழங்கப்பட்டுவந்தது. இப்படியான மோசடிகள் நடைபெறுவதை அடுத்தே பணம் மாற்ற விசேஷவங்கி திறக்கப்பட்டுள்ளது.

இவ்வாறு மோசடி செய்த 12 பேரை தமிழகப் பொலீசார் அண்மையில் கைது செய்தனர். (இ-3)

## இலங்கை தமிழ் அகதிகளுக்கு மானிய விலையில் உணவு

யாழ்ப்பாணம், ஆக. 4

தமிழகத்தில் உள்ள ஈழ அகதிகளுக்கு மானிய விலையில் உணவுப் பொருள்கள் வழங்கப்படுகின்றன.

தமிழக மக்களுக்கு 3 ரூபா 25 சதத்துக்கு ஒரு கொத்து அரிசி வழங்கப்படுகிறது.

ஆனால் அகதிகளுக்கு 52சதத்துக்கு ஒரு கொத்து அரிசி வழங்கப்படுகிறது ஒரு கிலோ சீனி 52 சதத்துக்கு வழங்கப்படுகிறது. அத்துடன் சமையல் பாத்திரங்களை அரசு இலவசமாக வழங்கி வருகிறது. (இ-3)

## தமிழகம் செல்ல மன்னாரில் தவம் கிடக்கும் அகதிகள்

தலைமன்னார் கடற்கரையிலும், காட்டுப்பள்ளிவாசல் பகுதியிலும் 5 ஆயிரத்திற்கும் மேற்பட்டவர்கள் தமிழகம் செல்ல வள்ளத்துக்காக காத்திருக்கின்றனர்.

அந்தப் பகுதிகளில் பாண் பணிஸ் மட்டுமே வாங்கலாம். இவற்றை சாப்பிட்டுக் கொண்டே அவர்கள் இருக்கிறார்கள்.

ஓர் இறாத்தல் பாண் 10 ரூபாப்படி விற்பனையாகிறது. [illegible] தேநீர் 4 ரூபா. (இ-3)

நேற்று அங்கிருந்து வந்தவர்கள் இதனைத் தெரிவித்தனர்.

## ஹெலி வெளிச்சத்தை அணைத்த போது....!

வானத்தில் பறந்துகொண்டிருந்த ஹெலிக்கொப்டர் ஒன்று திடீர் என்று வெளிச்சத்தை அணைத்துவிட்டுத் திசைமாறிச் சென்றுவிட்டது.

வெளிச்சத்தை வைத்து ஹெலியை நோட்டமிட்டுக் கொண்டிருந்தவர்கள், திடீர் என வெளிச்சம் இல்லாமல் போகவே ஹெலி தரைஇறங்கி விட்டதாக எண்ணினர்.

இதனால் கிலிகொண்ட மக்கள் தமது இருப்பிடங்களை விட்டு பாதுகாப்பான இடங்களை நோக்கிச் சென்றனர்.

ஹெலி இறங்கவில்லை. அது சென்றுவிட்டது என்று உறுதி செய்தபின்பே அவர்கள் வீடு திரும்பினார்கள்.

இச்சம்பவம் கடந்த திங்கட்கிழமை இரவு 7.30 மணி அளவில் புங்குடுதீவின் தென்கிழக்குப் பகுதியில் இடம்பெற்றது. (இ-131)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தெல்லிப்பழை ப. நோ. கூ. சங்கம்
(வரையுள்ளது)

ஆங்கில பேச்சு வகுப்பு (English elocution Class) மாணவர் கவனத்திற்கு,

எதிர்வரும் 11 - 08 - 90 ஆம் திகதி சனிக்கிழமை காலை 9. 00 மணிக்கு துர்க்கையம்மன் கோவிலடியி அமைந்துள்ள தெல்லிப்பழை ப. நோ. கூ. சங்க காரியாலயத்தில் சமுகமளித்து, நடாத்தப்பட்ட பரீட்சையின் சான்றிதழைப் பெற்றுக்கொள்ளவும். தொடர்ந்து வகுப்பு நடாத்த ஒழுங்கு செய்யப்பட்டுள்ளது என்பதனையும் அறியத்தருகின்றேன். மேலதிக விவரங்களுக்கு துர்க்கையம்மன் கோவிலடியில் அமைந்துள்ள காரியாலயத்தில் தொடர்பு கொள்ளவும்.

தலைவர்,
தெல்லிப்பழை ப. நோ. கூ. சங்கம்

1990 - 07 - 31 (சி/5194)

# தீவுப்பகுதியின் 5 முகாம்களிலும் கண்நோய், வயிற்றோட்டம்

யாழ்ப்பாணம், ஆக. 4

தீவுப் பகுதியில் உள்ள ஐந்து அகதி முகாம்களிலும் கண் நோய், வயிற்றோட்டம் முதலிய நோய்கள் பரவி வருவதாகத் தெரிவிக்கப்பட்டது

வேலணை கிராமிய வைத்தியசாலை வைத்திய அதிகாரி திரு. ஆ திருநாவுக்கரசு தலைமையில் சென்.ஜோன்ஸ் அம்புலன்ஸ், செஞ்சிலுவைச் சங்கம், சனசமூக நிலையங்கள் ஆகியவற்றின் பிரதிநிதிகள் நோய்த் தடுப்பு வேலையில் ஈடுபட்டிருப்பதாகவும் தெரிவிக்கப்பட்டது. [உ-3]

## ரதோற்சவம்

கொழும்புத்துறை, ஆக 4

வழக்கம்பரை ஸ்ரீ மகாமாரி அம்மன் ஆலய வருடாந்த மகோற்சவம் கடந்த மாதம் 27 ஆம் திகதி வெள்ளிக்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமானது.

நாளை ஞாயிற்றுக்கிழமை காலை தேர்த்திருவிழாவும், திங்கட்கிழமை தீர்த்தோற்சவமும் நடைபெறும். (உ-30)

## தமிழ் மாணவர் ஒன்றியம் கண்டன சுவரொட்டிகள்

ஜீ. சி. ஈ. (உயர்தர) பரீட்சைக்கு தோற்றுவதற்காக வெளிமாவட்டங்களுக்கு சென்ற மாணவர்களைக் கண்டித்து தமிழ் பேசும் மாணவர் ஒன்றியம் வடமாகாணத்தில் பரவலாக சுவரொட்டிகளை ஒட்டியுள்ளது.

''இவர்கள் வெளியேற்றப்பட வேண்டியவர்கள்'' என்ற தலைப்பில் இந்தச் சுவரொட்டிகள் ஒட்டப் பட்டிருந்தன.

''தமிழ் பேசும் மாணவர்களின் நலனைப் புறக்கணித்து தங்கள் சுயநலத்தினை கருத்தில் கொண்டு, பரீட்சைக்காக வெளிமாவட்டங்களுக்கு சென்ற மாணவர்களின் குடும்பங்கள் தமிழீழ மண்ணில் இருப்பதற்கு தகுதியற்றவை. பரீட்சை எடுப்பதற்காக பிற மாவட்டம் சென்ற உங்களது பிள்ளைகளை 08-08-1990 இற்கு முன் திருப்பி அழையுங்கள். அல்லது தமிழீழ மண்ணை விட்டு வெளியேற்றப்படுவீர்கள்''— இவ்வாறு அந்த சுவரொட்டியில் தெரிவிக்கப்பட்டிருந்தது (உ)

## தீவுப்பகுதியில் மருந்து தட்டுப்பாடு

யாழ்ப்பாணம், ஆகஸ்ட் 4

தீவுப்பகுதி வைத்தியசாலைகளில் போதியளவு மருந்து வகைகள் கையிருப்பில் இல்லை என யாழ். சுகாதாரத் திணைக்களத்துக்கு அறிவிக்கப்பட்டுள்ளது.

மருந்து வகைகள் இல்லாத காரணத்தால் சாதாரண நோய்களுக்குக் கூட சிகிச்சை செய்ய முடியாதிருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது.

தீவுப் பகுதிக்கான மருந்து வகைகளை அனுப்பி வைப்பதற்கு சுகாதாரத் திணைக்களம் நடவடிக்கை எடுத்து வருவதாக சுகாதாரத்திணைக்கள அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

## 31 ஆம் நாள் நினைவஞ்சலி



### திரு. வைரமுத்து இரத்தினம்
[முன்னாள் சீமெந்துக் கூட்டுஸ்தாபன ஊழியர்]

தோற்றம்: 19 - 05 - 1919 மறைவு: 05 - 07 - 1990

எங்களையெல்லாம் அன்புடனும் பாசத்துடனும் வளர்த்து ஆளாக்கிய எம் இதயத் தெய்வத்தை நாங்கள் நினைவு கூருகின்றோம்.

உங்கள் ஆத்மா சாந்தியடைய பிரார்த்திக்கும்,

மனைவி, பிள்ளைகள்,
மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

தற்காலிக முகவரி:
மாசியப்பிட்டி,
சண்டிலிப்பாய்.

சலவத்தை லேன்,
காங்கேசன்துறை.

[13974]

யாழ் புதிய உயர் கல்லூரியில் பதிவு செய்த G.A.Q, B.A மாணவர்களுக்கான

## அறிவித்தல்

G A.Q ,B.A மாணவர்களுக்கான பரீட்சைகள் நடாத்தப்பட இருப்பதனால், மேற்படி பரீட்சைகளுக்கான விண்ணப்பங்கள் அனுப்புதல் தொடர்பாக கலந்துரையாடுவதற்காக கொக்குவில் இந்துக் கல்லூரியில் 5-8.1990 (ஞாயிறு) அன்று காலை 10 மணிக்கு சமுகமளிக்குமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றனர்.

இயக்குனர்,
யாழ். புதிய உயர் கல்லூரி.

ஆரியகுளம் சந்தி,
யாழ்ப்பாணம்.

(C/5295)

## இடமாற்றம்

எமது அன்புக்குரிய தமிழீழ மக்களே! வாடிக்கையாளரின் நன்மை கருதி எமது ஸ்தாபனங்களை கீழ்க்காணும் முகவரியில் அமைத்துள்ளோம்.

**ஸ்ரீகாந் புத்தகசாலை - மக்மிலன் புத்தகசாலை**

பருத்தித்துறை வீதி,
[நல்லூர் கோயில் முன்பாக]
நல்லூர்.

★ குறிப்பு:- (இதன் கிளை ஓட்டுமடம் சந்தியிலும் இயங்கிவருகிறது என்பதை அன்புடன் அறியத் தருகிறோம்)

[சி/5292]

## 31 ஆம் நாள் நினைவஞ்சலி



### திருமதி இராசமணி ஞானப்பிரகாசம்
(இளைப்பாறிய ஆசிரியை,
யாழ். திருக்குடும்ப கன்னியர் மடம்)

தோற்றம்: 12 - 12 - 1913 மறைவு: 04 - 07 - 1990

அன்புடனும் பாசத்துடனும் எங்களை வளர்த்த எங்கள் அன்புத் தாயாரே! அம்மா, அம்மம்மா என்று வரும்போதெல்லாம் எங்களை அரவணைத்து வழிநடத்தினீர்களே! உங்கள் அன்பான உபசரிப்புக்களும் முன்மாதிரிகளும் என்றும் எங்கள் நெஞ்சத்தை விட்டகலா. உங்கள் ஆன்மா சாந்தியடைய கண்ணீருடன் பிரார்த்திக்கின்றோம்.

குடும்பத்தினர்.

வீமன்காமம்,
தெல்லிப்பளை.

(13602)

## அவசர இரத்த மாற்றீட்டுச் சேவை

- O தானத்தில் சிறந்தது இரத்ததானம் !
- O இரத்த தானம் செய்வது தொண்டுகளில் அளப்பரியது !!
- O ஏனைய தொண்டுகளைச் செய்ய இயல்பில்லாதவர்கள் இரத்ததானம் செய்து தொண்டு புரிந்த மனத்திருப்தியைப் பெறலாம் !!!

அன்பான பொதுமக்களே !

இன்றைய நெருக்கடியான காலகட்டத்தில் பொது மக்களின் அனாவசிய உயிர் இழப்பைத் தடுக்கவும், யாழ். பொது மருத்துவமனை இரத்த வங்கியின் இரத்தப் பற்றாக்குறையை நிவர்த்தி செய்யவும், யாழ் பரியோவான் கல்லூரி ''இன்ரறக்ட்'' கழகத்தினரும், உதயன் பத்திரிகை நிறுவனத்தினரும் இணைந்து இரத்த மாற்றீட்டுச் சேவை என்னும் திட்டத்தை ஆரம்பித்துள்ளனர்.

- ★ 16 வயதிற்கு மேற்பட்ட சேவை மனப்பான்மை கொண்ட— எவ்வேளையிலும் இரத்தம் வழங்க— தயாராகவுள்ள அனைவரும் இத்திட்டத்தில் அங்கத்தவராகலாம்.
- ★ அங்கத்தவராக விரும்பும் எவரும் பரியோவான் கல்லூரி ''இன்ரறக்ட்'' கழக உறுப்பினரிடமோ அல்லது உதயன் பத்திரிகைப் பணிமனையிலோ தங்கள் பெயர் விவரங்களைப் பதிவு செய்து கொள்ளலாம்.
- ★ இரத்ததானம் செய்ய விரும்புவோரின் வசதி கருதி. நல்லூர் கந்தசுவாமி கோவில் உற்சவ காலத்தில் [மேற்கு வீதியில்] இயங்கும் யாழ். மாநகரசபை அலுவலகத்திலும் பெயர் விவரங்களைப் பதிவு செய்ய ஒழுங்கு செய்யப்பட்டுள்ளது.
- ★ இரத்ததானம் செய்வோருக்கு அங்கீகரிக்கப்பட்ட அடையாள அட்டை வழங்கப்படும்.
- ★ இரத்ததானம் செய்தோரின் குடும்பத்தினருக்கு இரத்தம் தேவைப்படும் பொழுது அவர்களுக்குத் தேவையான இரத்தத்தை வழங்க முன்னுரிமை அளிக்கப்படும்.
- ★ இரத்ததானம் செய்பவர்களுக்கு பிரயாண வசதி அல்லது அதற்குரிய செலவு மற்றும் உணவும் வழங்கப்படும்.
- ★ மக்களே! உங்கள் ஒரு துளி இரத்தம் பெறுமதி வாய்ந்த ஓர் உயிரைக் காப்பாற்றப் போகிறது என்பதை மனதிற்கொண்டு இத்திட்டத்தில் இணைந்து கொள்ளுங்கள்.

உயிர் காப்பது இரத்த தானமே!

**உதயன் வெளியீட்டகம்**
நாவலர் வீதி, யாழ்ப்பாணம்.

**இன்ரறக்ட் கழகம்**
பரியோவான் கல்லூரி, யாழ்ப்பாணம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வடக்கு - கிழக்கு அகதிகளுக்கு
# மேலும் ரூ. 50 கோடி அமெரிக்க உதவி

கொழும்பு, ஆக. 4

பி. எல். 480 உதவித் திட்டத்தின் கீழ் அமெரிக்கா மேலும் சுமார் 50 கோடி ரூபா [ஒரு கோடி டொலர்] நிதி உதவியை அளிக்க உடன்பட்டுள்ளது.

வடக்கு - கிழக்கில் நடைபெறும் யுத்தத்தின் காரணமாக பாதிக்கப்பட்டு அகதிகளானவர்களுக்கு நிவாரணம் அளிக்க உதவும் படி இலங்கைத் தூதர் அமெரிக்க அரசைக் கேட்டிருந்தார். அதற்கிணங்கவே இந்த நிதி உதவியை அளிக்க அமெரிக்க அரசு ஒப்புக்கொண்டதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

பி. எல். 480 உதவித் திட்டத்தின் கீழ் இந்த ஆண்டில் ஏற்கனவே ஒருகோடி டொலர் நிதி உதவியை அளிக்க அமெரிக்கா இலங்கையுடன் உடன்படிக்கை செய்தது தெரிந்ததே. (உ-எ)

## யாழ். பிரஜைகள் குழு மகஜர்

யாழ்ப்பாணம், ஆக. 4

வடக்கு - கிழக்கு தற்போதைய நிலைமை குறித்து யாழ்ப்பாணம் பிரஜைகள்குழு ஜனாதிபதி பிரேமதாஸாவுக்கும் செஞ்சிலுவைச் சங்கத்தின் சர்வதேசக் குழுவின் தலைவர் டாக்டர் பிலிப் கொன்ராவுக்கும் தனித்தனியே மகஜர்களை அனுப்பி வைத்துள்ளது

உணவு, மருந்து மற்றும் எரிபொருள்களுக்கு பெரும் தட்டுப்பாடு நிலவுகிறது.

யாழ். போதனா ஆஸ்பத்திரி, மற்றும் வடக்கு-கிழக்கு மாவட்டங்களில் உள்ள ஆஸ்பத்திரிகள் மீண்டும் திறக்கப்படவேண்டும்.

பயணிகள்–மற்றும் பொருள்களை ஏற்றிச் செல்லும் தனியார் வாகனங்களுக்குப் பாதுகாப்பு வழங்கப்படவேண்டும். என்று மகஜரில் கோரப்பட்டுள்ளது.

ஜூலை 21 ஆம் திகதிவரை வடக்கு–கிழக்கில் 8 லட்சம் பேர் இடம் பெயர்ந்துள்ளனர் என்றும் இரண்டாயிரத்துக்கும் அதிகமானோர்கொல்லப்பட்டுள்ளனர் என்றும் மகஜரில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (இ)

## விமான விபத்தில் 30 பேர் பலி

மாஸ்கோ, ஆக. 4

சோவியத் விமானம் ஒன்று மலை உச்சியில் மோதி நொருங்கி வீழ்ந்ததில் அதில் பயணம் செய்தவர்களில் 30 பேர் உயிரிழந்தனர். (இ-எ)

## அகதிகளுக்கு சிகிச்சை அளிக்க 3 வைத்திய நிலையங்கள்

யாழ்ப்பாணம், ஆக. 4

யாழ்-மாநகர சபை எல்லைக்குள் இயங்கும் அகதிமுகாம்களில் உள்ளோருக்கு சிகிச்சை அளிக்க மூன்று வைத்திய நிலையங்கள் அமைக்கப்பட உள்ளன.

யாழ்-ஒஸ்மானியாக் கல்லூரி, யாழ் சென்.பற்றிக்ஸ் கல்லூரி, கொழும்புத்துறை ஆகிய இடங்களில் அமையவிருக்கும் இந்த வைத்திய நிலையங்களில் யாழ் செஞ்சிலுவைச்சங்க தொண்டர் வைத்தியர்களும், சுகாதாரத் தொண்டர்களும் கடமை புரிவர்.

தினமும் காலை 9மணியில் இருந்து 11 மணிவரை இந்த நிலையங்கள் இயங்கும் எனத் தெரிவிக்கப்பட்டது. (இ-3)

## போராளி விபத்தில் மரணம்

யாழ்ப்பாணம், ஆக. 4

வயாவிளான் பலாலி வீதியில் நேற்று முன்தினமிரவு 9 மணிக்கு இடம் பெற்ற வாகன விபத்து ஒன்றில் விடுதலைப் புலிகள் இயக்கத்தைச் சேர்ந்த மேஜர் சூட்டி (சிவரத்தினம் ஸ்ரீதரன்–தையிட்டி காங்கேசன் துறை) என்ற போராளி மரணமானார்.

இவர் கப்டன் வரதப்பாவின் சகோதரர் ஆவார்.



மேஜர் சூட்டி

மேஜர் சூட்டி மன்னார் பகுதியில் இடம் பெற்ற பல முக்கிய தாகுதல்களில் பங்காற்றி சாதனைகள் படைத்தவர் என்றுவிடுதலைப் புலிகள் வட்டாரங்கள் தெரிவித்தன.

அன்னாரின் பூதவுடல் அவரது தெல்லிப்பழை இல்லத்தில் இருந்து இன்று காலை 8 மணிக்கு எடுத்து வரப்பட்டு யாழ் இந்து மகளிர் கல்லூரி மண்டபத்தில் பொது மக்களின் அஞ்சலிக்காக வைக்கப்படும்.

மீண்டும் பூதவுடல் பகல் 12 மணியளவில் தெல்லிப்பழைக்கு எடுத்துச் செல்லப்பட்டு, மகாஜனாக் கல்லூரி மண்டபத்தில் அஞ்சலிக்காக வைக்கப்பட்டு, பின்னர்மாலை 4 மணியளவில் பூதவுடல் ஊர்வலமாக எடுத்துச் செல்லப்பட்டு அளவெட்டி இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும், [உ-9]

## கால்களை இழந்த பொதுமக்கள்

கிளிநொச்சி, ஆக. 4

கைவிடப்பட்ட நிலையில் காணப்படும் கிளிநொச்சி இராணுவ முகாமை பார்வையிடச் சென்றவர்களில்பொது மக்கள் இதுவரை 7 பேர் கால்களை இழந்துள்ளனர்.

முகாம் பகுதியில் புதைக்சப்பட்டிருந்த மிதிவெடிகளில் சிக்குண்டே இவர்கள் கால்களை இழந்தனர்.

இதனால் முகாம் பகுதிகளில் மக்கள் எவரையும் நடமாட வேண்டாம் என்று விடுதலைப் புலிகள் கேட்டுள்ளனர். (ஒ-76)

## பரந்தன் முகாம் பலமாகிறது

பரந்தன் சந்தியில் புதிதாக முகாம் அமைத்துள்ள இராணுவத்தினர் தமது முகாமை பலப்படுத்தும் முயற்சியில் ஈடுபட்டுள்ளனர். (ஒ-76)

## வயாவிளான் பகுதி மக்களின் கடிதங்கள் அச்சுவேலியில்

வயாவிளானில் இருந்து இடம்பெயர்ந்துள்ள மக்கள் தமக்குரிய கடிதங்களை அச்சுவேலிதபாலகத்திற்குச்சென்று பெற்றுக்சொள்ளுமாறு யாழ். மாவட்ட தபால் அத்தியட்சகர் கேட்டுக்கொண்டுள்ளார்.

வயாவிளான் தபால் அலுவலகம் தற்போது அச்சுவேலி தபால் அலுவலகத்தில் தனியாக இயங்கி வருகிறது.

இதேவேளை தூரஇடங்களுக்கு இடம்பெயர்ந்துள்ள மக்கள் தமது புதிய விலாசத்தைக் கொடுத்து உதவுமாறும் தபால் அத்தியட்சகர் திரு. க. கனகசுந்தரம் வேண்டுகோள் விடுத்துள்ளர். [ஒ-10]

## உண்மையான அ. தி. மு. க. திருநாவுக்கரசு பிரிவாம்
### சபாநாயகரிடம் விண்ணப்பம்

சென்னை, ஆக. 4

உண்மையான அ. தி. மு. க. தாங்களே என்று திரு. திருநாவுக்கரசைப் பொதுச் செயலாளராகக் கொண்ட போட்டி அ. தி. மு. க. பிரிவு தமிழக சட்டசபை சபாநாயகரிடம் விண்ணப்பித்துக் கொண்டிருக்கிறது.

திரு. திருநாவுக்கரசும் துணைப் பொதுச்செயலாளரான திரு. கே. கே. எஸ். இராமச்சந்திரனும் சபாநாயகர் திரு. தமிழ்க்குடிமகனை வியாழக்கிழமை சந்தித்து இது தொடர்பான மனு ஒன்றைச் சமர்ப்பித்தனர்.

சட்டசபையில் தங்களையே உண்மையான அ தி மு. க. ஆக அங்கீகரிக்க வேண்டும் என்றும் அவர்கள் சபாநாயகரைக் கேட்டுக் கொண்டனர்.

சட்டசபைக் கூட்டத் தொடர் எதிர்வரும் வெள்ளிக்கிழமை ஆரம்பமாக உள்ளது குறிப்பிடத்தக்கது. [இ-எ]

## சமூக நல ஸ்தாபன தலைவர் கூட்டம்

யாழ்ப்பாணம், ஆக. 04

யாழ்ப்பாணம், நல்லூர் உதவி அரசாங்க அதிபர் பிரிவில் இயங்கும் கிராம அபிவிருத்திச்சங்கங்கள், சனசமூக நிலையங்கள் ஆகிய சமூக நல ஸ்தாபனங்களின் தலைவர்களுக்கான கூட்டம் இன்று சனிக்கிழமை காலை 10 மணிக்கு நாச்சிமார் கோவிலடியில் உள்ள பெரிய புலம் மகாவித்தியாலய மண்டபத்தில் நடைபெறும்.

தமிழீழ ஆய்வு நிறுவனத்தால் இந்தக்கூட்டம் கூட்டப்படுகிறது. (இ)

## ● குண்டுச் சத்தத்தைக் கேட்ட ஒருவர்...!

யாழ்ப்பாணம், ஆகஸ்ட் 4

யாழ். நகரிலும், அதனை அண்டிய பகுதிகளிலும் இப்போது நாளாந்தம் விமானங்கள் பேரிரைச்சலுடன் வந்து குண்டு வீசுகின்றன. குண்டுகள் விழுந்து வெடிக்கும் சத்தமோ நெஞ்சத் துடிப்பை அதிகரிக்கிறது.

இதனால் மக்கள் தங்களை அறியாத ஒருவித மனப்பிராந்தியுடன் வாழ்கிறார்கள். ஒரு சிலர் எடுத்ததற்கெல்லாம் பீதியுறுகிறார்கள். வேறுசிலர் வாழ்க்கை வெறுத்தது போல விரக்தி கொள்கிறார்கள். விரக்தியுறும் ரகத்தில் வயதான முதியவர்களே அனேகர். அவர்களில் ஒருவர் நேற்று விபரீதமான முயற்சியில் இறங்கினார்.

அறுபது வயதினரான அரியாலையைச் சேர்ந்த அந்த நபர், நேற்றுக் காலை விமானம் வந்தவுடன் வீசிய பெரும் குண்டுச் சத்தத்தைக் கேட்டதும், தமது முக்கிய உறுப்பு ஒன்றை வெட்டித்தற்கொலை செய்ய முயற்சித்தார்.

அவர் மானிப்பாய் ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுச் சிகிச்சை பெற்று வருகிறார். (அ-10)

## இரத்ததானம்

யாழ்ப்பாணம், ஆக. 4

மானிப்பாயில் இயங்கும் யாழ். போதனா வைத்திய சாலைப் பிரிவில் நிலவும் இரத்தத் தட்டுப்பாட்டை அடுத்து யாழ்.செஞ்சிலுவைச் சங்கக் கிளையில் கடமைபுரியும் 15 தொண்டர்கள் நேற்று இரத்ததானம் வழங்கினார்கள். (இ-3)

## நாள்தோறும் ஹெலி வேட்டு

கிளிநொச்சி, ஆக. 4

கிளிநொச்சிப் பகுதியில் தற்போது தினம்தோறும் ஹெலியில் இருந்து துப்பாக்கி வேட்டுக்கள் தீர்க்கப்படுகின்றன.

கைவிடப்பட்ட கிளிநொச்சி இராணுவமுகாம், 55 ஆம் கட்டை, சுரடிப்போக்கு மற்றும் மக்கள் நடமாடும் பகுதிகளை நோக்கியே வேட்டுக்கள் தீர்க்கப்படுகின்றன. (ஒ-76)

## பயணிகள் அனுமதிப்- - - -

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

சியம் உள்ளதால் அவர்கள் அப்பகுதி உதவி அரசாங்க அதிபர், கிராம சேவையாளர் ஆகியோரின் அத்தாட்சிக் கடிதத்தைச் சமர்ப்பிக்கும் பட்சத்தில் ஒரு மாதத்திற்கான போக்குவரத்து 'பாஸ்' வழங்கப்படும்.

★ யாழ். மாவட்டத்திலிருந்து தமிழ் மாவட்டங்களுக்கு சைக்கிளில் சென்று வியாபார வேலைகளில் ஈடுபடுபவர்களுக்கு 15 நாட்களுக்கான பாஸ் வழங்கப்படும். இந்தப் பாஸ் மூலம் பயணிகள் பஸ்ஸில் செல்வதற்கு அனுமதி வழங்கப்படமாட்டாது.

★ தென்மராட்சி பயணிகளின் வசதிகருதி சாவகச்சேரிப் பகுதியில் பயணிகள் போக்குவரத்து தொடர்பகம் ஒன்றை நிறுவி இன்று முதல் அங்கு வைத்து ''பாஸ்கள்'' வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

★ தமிழ் மாவட்டங்களுள் பயணம் செய்ய ''பாஸ்'' கோரி விண்ணப்பிப்போருக்கு 6 மணி நேரம்முதல் 12 மணி நேரத்திற்குள்ளும்—

தென்பகுதிக்கான பயணம் மேற்கொள்ள விண்ணப்பிப்போருக்கு 48 மணி நேரத்தின் பின்னரும் அது வழங்கப்படும்.

★ அனேகமாக விண்ணப்பித்த அனைவருக்கும் 'பாஸ்'கள் வழங்கப்பட்டு வருகின்றன.

விண்ணப்பித்தும் பாஸ் வழங்கப்படாதவர்கள் அதுபற்றி தொடர்பக பொறுப்பதிகாரியுடன் தொடர்பு கொண்டு பயணத்திற்கான தகுந்த ஆதாரங்களை காட்டி பாஸ் பெற முடியும்.

★ விண்ணப்பித்து பயண அனுமதி வழங்கப்பட்டவர்களில் 200 பேர் இன்னும் 'பாஸை' எடுத்துச் செல்லவில்லை.

★ பயணிகளுக்கு வழங்கப்படும் 'பாஸ்' ஒரு பயணத்துக்கு மட்டுமே செல்லுபடியாகும்.

★ லொறிகளுக்கு விண்ணப்பித்து 2 மணிநேரத்தில் 'பாஸ்' வழங்கப்படும்.

★ பதுங்கு குழி வெட்டிக் கொடுத்தால் 'பாஸ்' கிடைக்கும் என்று பரவலாக ஒரு வதந்தி அடிபடுகிறது. அதில் எந்தவித உண்மையுமில்லை.

★ பாஸ் எடுத்து குறிப்பிட்ட தினத்திற்குள் பயணம் செய்யவேண்டும் என்ற வரைமுறை கிடையாது. ஆனால் காலப்போக்கில் அது வரையறுக்கப்படலாம்.

★ அரச திணைக்களங்கள் மற்றும் தனியார் துறை ஊழியர்கள் அடிக்கடி பயணம் செய்யவேண்டிய தேவைஇருந்தால் அதுபற்றி தமது உயரதிகாரியின் சிபாரிசுடன் விண்ணப்பித்தால் அவர்களுக்கு நிரந்தர பாஸ் வழங்கப்படும்.

★ மதகுருமாருக்கு பாஸ் வழங்கப்படுவதில் முன்னுரிமை தரப்படும்.

★ அவசர தேவையாக — குறிப்பாக மரணச் சடங்குகள் மற்றும் நோயாளிகள் சம்பந்தப்பட்ட நடவடிக்கைகளால் அவசர பயணம் மேற்கொள்பவர்களுக்கு விசேஷ ''பாஸ்'' வழங்கப்படும்.

திரு. சலீம் மேலும் தகவல் தருகையில்—

''பாஸுக்கு விண்ணப்பித்த எவரது விண்ணப்பங்களும் நிராகரிக்கப்படவில்லை. இதுவரை அதனைப் பெறாதவர்கள் என்னுடன் தொடர்பு கொள்ளவும். ஏற்கனவே வரைபடங்களுடன் 4 உளவாளிகளை கைது செய்துள்ளோம்.

அதனை அடுத்தே இந்த நடைமுறையை அமுல்படுத்தியுள்ளோம். இந்த நடைமுறையால் பொதுமக்களுக்கு ஏற்படும் அசௌகரியங்களுக்கு வருந்துகிறோம்''— என்றார். (உ-9)

## வவுனியா விலி . .

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

வித்தன.

ஓமந்தைப் பகுதிவரையுள்ள பல நிலைகளின் மீது வியாழன்று விமானத் தாக்குதல்கள் இடம்பெற்றன. ஷெல் தாக்குதல்களும் இடம்பெற்றதாகத் தெரியவந்தது.

நேற்று இலுப்பைக்குளம் பகுதியில் மேற்கொள்ளப்பட்ட பொம்மர் தாக்குதலால் அப்பகுதியில்உள்ள கமநலசேவை நிலைய விவசாய உபகரணங்களும்,மற்றும் இயந்திரங்களும்பலத்த சேதமடைந்தன.

ஏற்பட்ட சேத விவரங்கள் குறித்து விரிவான தகவல்கள் கிடைக்கவில்லை.

ஆனால் ஓமந்தைப் பகுதியிலிருந்து பெருமளவில் மக்கள் வடக்கு நோக்கி இடம்பெயர்ந்து வந்துகொண்டிருப்பதாக அங்கிருந்து கிடைத்த செய்திகள் தெரிவித்தன. [உ]

## நல்லூர் உற்சவகால சிறப்பம்சம்

### முருகா! அருளைச் செய்!!

அன்றமைதி காக்க வந்த ''ஐ.பி.கே'' வன்படையால்
துன்புற்று நாங்கள் துடிதுடித்தோம் — இன்றோ
அதிலும் பதின்மடங்குக் காளானோம்;– நல்லைப்
பதிமுருகா! பார்த்தருளைச் செய்

–கவியரசு வெண்பாமணி முருகசூரியன்

[இன்று நல்லூர்க் கந்தசுவாமி 9 – ஆம் திருவிழா]

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# தேவிலால் உட்பட முழு எம்.பிக்களும் வி. பி. சிங்கிற்கு பூரண ஆதரவு!

புதுடில்லி, ஆகஸ்ட் 4 பதவி நீக்கம் செய்யப்பட்ட இந்தியாவின் முன்னாள் துணைப் பிரதமர் தேவிலால் உட்பட தேசிய முன்னணி அரசில் அங்கம் வகிக்கும் சகல கட்சிகளின் எம். பிக்களும் பிரதமர் வி. பி. சிங்கிற்கு தமது பூரண ஆதரவை ஏகமனதாக வழங்கியிருக்கிறார்கள்.

தேவிலாலும் ஏனைய எம். பிக்கள் அனைவரும் கலந்து கொண்ட கூட்டம் நேற்று நடைபெற்றது. அக்கூட்டத்திலேயே ஆதரவு வழங்குவது சம்பந்தமான பிரேரணை நிறைவேறியது.

இதேவேளை தேவிலால் பதவிநீக்கம் செய்யப்பட்டதை ஆட்சேபித்து தமது பதவியை ராஜினாமாச் செய்த நாடாளுமன்ற விவகார துணை அமைச்சர் ஜாடீஷ் தாப்கர் தனது பதவி விலகல் கடிதத்தை வாபஸ் பெற்றுவிட்டார் என்று அறிவிக்கப்பட்டது. [உ–எ]

## இலங்கை விவகாரம்:

# இந்தியா நிலைப்பாட்டில் மாற்றம் வேண்டும்!

### மூப்பனார் கோரிக்கை

இலங்கை விவகாரத்தில் தலையிடுவது இல்லை என்ற தனது நிலைப்பாட்டை இந்திய அரசு மாற்றிக் கொள்ள வேண்டும்.

தமிழ் நாடு சட்ட சபை இந்திரா காங்கிரஸ் தலைவரான திரு. ஜி. கே. மூப்பனார் மேற்கண்டவாறு கோரிக்கை விடுத்தார்.

சென்னையில் கடந்த வியாழன் நடந்த நிகழ்ச்சி ஒன்றில் பேசியபோது இந்த வேண்டுகோளை அவர் விடுத்தார்.

அவர் மேலும் சொன்னதாவது;

இலங்கை எப்போதும்இந்தியாவின் உதவியை ஏற்றுக்கொண்டே வந்து உள்ளது. நல்லெண்ண அடிப்படையில் இந்திய உதவியை இலங்கை ஏற்றுக்கொள்ளும்.

இலங்கையில் இனக் கொலை நடப்பதை இந்தியா வெறுமனே பார்த்துக் கொண்டிருக்கக்கூடாது

இலங்கையில் இடம்பெறும் இனப் படுகொலையை நிறுத்துமாறு அந்த நாட்டு அரசை வற்புறுத்த இந்திய அரசு உடனடி நடவடிக்கை எடுக்க வேண்டும்.

இப்படி அவர் கேட்டுக் கொண்டார்.

# மரண அறிவித்தல்கள்

## திருமதி அன்னம்மா குழந்தைவேலு

திருமதி அன்னம்மா குழந்தைவேலு அவர்கள் 03 – 08 – 1990 இல் காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற குழந்தைவேலுவின் அன்பு மனைவியும், தையல்நாயகி செல்வேந்திரன் (கல்வித்திணைக்களம் திருமலை) செல்வநாயகி (ரோகிணி) (யாழ். தொழில்நுட்பக் கல்லூரி) ஆகியோரின் அன்புத் தாயாரும், பிறைசூடி (ஓய்வுபெற்ற சுங்கத்திணைக்கள அதிகாரி), பரமேஸ்வரி, சிவசுப்பிரமணியம் ஆகியோரின் அன்பு மாமியாரும் இரவிவர்மன், வரலட்சுமி, சிறீராமவர்மன், நாகவர்மன், ஜெயவர்மன், சிவகுமார், சிவகௌரி, சிவமனோகரன். செந்தூர்ச் செல்வன், சிவமனோகரி, நரேந்திரன், டரணீதரன், நகுலன், இரகுராம் ஆகியோரின் அன்புப் பேத்தியும் ஆவார்.

அன்னாரின் ஈமக்கிரிகைகள் 04 – 08 – 1990 இல் (சனிக்கிழமை) காலை 8.00 மணிக்கு மல்லாகத்தில் அமைந்துள்ள அன்னாரின் புதல்வியாரின் இல்லத்தில் நடைபெறும்.

இவ்வறிவித்தலை உற்றார் உறவினர்கள் நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு வேண்டுகின்றேன்.

தகவல்:

திருமதி ரோகிணி சிவசுப்பிரமணியம்,
சோடாக் கொம்பனி லேன்,
மல்லாகம்.

(13985)

## திருமதி தம்பிமுத்து இலட்சுமி

திருமதி தம்பிமுத்து இலட்சுமி 03-08-90இல் காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற தம்பிமுத்துவின் மனைவியும். காலஞ்சென்ற திருக்குலசிங்கம் (சதீஸ் றெக்கோடிங் ஸ்ரூடியோ), சிவபாலசிங்கம் (நீதிமன்றப் பதிவாளர் வேலணை). திவ்யசிரோன்மணி (அதிபர் இந்து மகளிர் கல்லூரி) வரதசிரோன்மணி, தனபாலசிங்கம் (டில்கா), காலஞ்சென்ற பூபாலசிங்கம், ஜெயா ஆகியோரின் அன்புத் தாயாரும், இ. க. நாகராஜா, சந்திரசேகரம் (விஜயா அழுத்தகம்), [illegible]ரசரட்ணம் (ஓய்வு பெற்ற தபால் அதிபர்), புவனேஸ்வரி, தவமணிதேவி, தனலட்சுமி ஆகியோரின் அன்பு மாமியுமாவார்.

அன்னாரின் ஈமக்கிரியைகள் 04 – 08 – 90 காலை 10.00 மணிக்கு 63, சிவகுருநாதர் வீதியிலுள்ள இல்லத்தில் நடைபெற்று கோம்பயன் மணல் மயானத்தில் தகனம் செய்யப்படும். உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் இவ்வறிவித்தலை ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:

த. தனபாலசிங்கம்

நீராவியடி.

[13990]

இப்பத்திரிகை நியூ உதயன் பப்பிளிக்கேஷன் (பிறைவேட்) லிமிட்டெட்டினால் யாழ்ப்பாணம், நாவலர் வீதி, 292/2 இலக்கத்தில் உள்ள அச்சகத்தில் 04-08-1990 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

## 15 தமிழர் வெட்டி கொலை?

யாழ்ப்பாணம், ஆகஸ்ட் 4 பொத்துவில் பகுதியில் உள்ள அகதிகள் முகாம் ஒன்றிலிருந்த 15 தமிழர்களைக் கடந்த திங்களன்று 'ஜிகாத்' அமைப்பைச் சேர்ந்தோர் என்று கருதப்படுபவர்கள் வெட்டிக் கொலை செய்ததாகக் கூறப்படுகிறது. [உ-9]

## கொட்டடியில் ஒருவர் காயம்

யாழ்ப்பாணம், ஆக. 4 யாழ். கொட்டடிப் பகுதியில் நேற்று முன்தினம் ஷெல் தாக்குதலுக்கு இலக்காகி ஒருவர் காயமடைந்தார்.

முத்தமிழ் வீதியைச் சேர்ந்த நாகலிங்கம் நவரத்தினம் (வயது 53) என்பவரே காயமடைந்தவர் ஆவார். (ஓ-10)

## போராளி வீரமரணம்

யாழ்ப்பாணம், ஆக. 4 பலாலி, பயிலிட்டிப் பகுதியில் நேற்று இராணுவத்தினருடன் நடந்த மோதல் ஒன்றில் நெல்சன் [இரத்தினம் ஜெயபாலசிங்கம்- மயிலிட்டி] என்ற விடுதலைப் புலிகள் இயக்கப் போராளி வீரமரணம் அடைந்தார். [உ–9]

## இரு இடங்களில் மின்வயர்கள் சேதம்

குடாநாட்டுக்கு மின்சாரத்தை விநியோகிக்கும் 132 கே. வி மின்வயர்கள் கிளிநொச்சியில் இரு இடங்களில் அறுந்து காணப்படுகின்றன.

கிளிநொச்சி டிப்போச் சந்திக்கு அண்மையிலும் பரவிப்பாஞ்சான் மருதடிப் பகுதியிலுமே வயர்கள் அறுந்து காணப் படுகின்றன, [ஓ-76]

## தி. மு. க. அரசை பதவி நீக்கும்படி தீர்மானம்

தமிழகத்தில் சட்டம், ஒழுங்கு சீர்கெட்டுள்ளதால் கருணாநிதிதலைமையிலான தி.மு.க. அரசை பதவி நீக்கம் செய்யும்படி ஜனாதிபதியைக் கோரும் தீர்மானம் ஒன்றை-ஜெயலலிதா தலைமையிலான அ. தி. மு. கவின் உயர்மட்டக்குழு நேற்று நிறைவேற்றியது. (ஓ–எ)

## 33 வீடுகளில் திருடியவர்

33 வீடுகளில் 25 லட்சம் ரூபாவுக்கு அதிகமான பணம் மற்றும் பொருள்களைத் திருடியவர் என்று கூறப்படும் 25 வயது இளைஞர் ஒருவரை [illegible] கைது செய்தனர். (இ–எ)

# 500 மெட்ரிக் தொன் மாவுடன் அடுத்த வாரம் கப்பல் வரும்!

யாழ்ப்பாணம், ஆகஸ்ட் 4 500 மெட்ரிக் தொன் மாவுடன் 'சிகிரியா' கப்பல் அடுத்த வாரம் பருத்தித்துறைக்கு வந்து சேரும் என யாழ். அரசாங்க அதிபர் தெரிவித்துள்ளார்.

பருத்தித்துறைக்கு வந்த பிரஸ்தாப கப்பல் உணவுப் பொருள்களை இறக்கிவிட்டு மா ஏற்றிவர திருகோணமலைக்கு புறப்பட்டுச் சென்றுள்ளது. [ஓ-எ]

# வெளியுறவு அமைச்சரும் ஆயுதம் வாங்கச் சென்றாரா?

கொழும்பு, ஆக 4 இலங்கை அரசாங்கம் வெளிநாடுகளில் இருந்து ஆயுதங்களை வாங்குவதில் இப்போது தீவிரமாக ஈடுபட்டுள்ளது.

அயுதங்களை வாங்குவது சம்பந்தமான பேச்சுகளை அதிகாரிகள் மட்டத்தில் வைக்காமல் அமைச்சர்கள் மட்டத்திலேயே அது நடந்து வருகிறது.

பாதுகாப்புத் துணை அமைச்சர் அரபு நாடுகளிடம் இருந்து ஆயுதங்களை வாங்குவதற்கான முயற்சிகளில் ஈடுபட்டுள்ளார் என்பது தெரிந்ததே.

வெளியுறவு அமைச்சர் திரு. ஹரோல்ட் ஹேரத் ஐந்து நாடுகளுக்கான தனதுவிஜயத்தை முடித்துக் கொண்டு நேற்றுக் கொழும்பு திரும்பினார்.

அவரது விஜயத்தின் முக்கிய நோக்கம் ஆயுதக் கொள்வனவே என்று ஏஜென்சிச் செய்திகள் தெரிவித்தன. (அ–எ)

# அரபு நாடுகளுக்கு சென்ற ரஞ்சன் குழு நாளை திரும்பும்

கொழும்பு, ஆக 4 அரபுநாடுகளுக்குச் சென்றிருக்கும் அமைச்சர் ரஞ்சன் விஜேரத்தினா தலைமையிலான குழுவினர் நாளை ஞாயிற்றுக்கிழமை கொழும்பு திரும்புகின்றனர்.

ஆயுதக்கொள்வனவு விஷயமாக இக் குழுவினர் ஈரான், ஈராக், லிபியா, துருக்கி ஆகிய நாடுகளுக்கு விஜயம் மேற்கொண்டிருக்கின்றனர் என்று உத்தியோக வட்டாரங்களை ஆதாரங்காட்டி ராய்ட்டர் செய்தி ஸ்தாபனம் அறிவித்திருக்கிறது.

ஆனால் அமைச்சர் ரஞ்சன் குழுவினரின் ஆயுதக்கொள்வனவை குவைத் மீதான படையெடுப்பு குழப்பலாம் என அரசியல் அவதானிகள் தெரிவித்தனர். (இ-எ)

# மூன்றாவது நாடு தலையிட்டால் குவைத் சுடுகாடாக மாறும்

### ஈராக் அரசு எச்சரிக்கிறது

குவைத்தில் மூன்றாவது நாடு ஒன்று தலையிட்டால் குவைத் சுடுகாடாக மாற்றப்படும்.

இப்படி ஈராக் நேற்று எச்சரித்தது.

இதனிடையில் இடைக்கால அரசு ஒன்று குவைத்தில் ஏற்படுத்தப்பட்டிருப்பதாக பக்தாத் வானொலி அறிவித்தது.

குவைத் மன்னரின் சொத்துக்கள், பணம் மற்றும் உடைமைகளை புதிய ஆட்சி பறிமுதல் செய்திருப்பதாகவும் அவை உரியவர்களிடம் ஒப்படைக்கப்படும் என்றும் அந்த உரியவர்கள் குவைத் நாட்டு மக்களே என்றும் பக்தாத் வானொலி மேலும் கூறியது. (இ-எ)

# படைகளை வாபஸ் பெறுமாறு ஐ. நா. ஈராக்கிடம் வற்புறுத்து

ஐ. நா, ஆகஸ்ட் 4 குவைத்தில் இருந்து படைகளை உடனடியாக விலக்கிக் கொள்ளும்படி ஐ. நா. பாதுகாப்புச் சபை ஈராக்கைக் கோரியுள்ளது.

சபையின் ஐந்து நிரந்தர உறுப்பு நாடுகளான சோவியத் யூனியன், அமெரிக்கா, பிரிட்டன், பிரான்ஸ், சீனா ஆகிய நாடுகள் இத் தீர்மானத்தை ஆதரித்தன.

ஈராக்கின் ஆக்கிரமிப்பை பாதுகாப்புச் சபை வன்மையாக கண்டனமும் செய்தது. [ஓ-எ]

# மரண அறிவித்தல்

## இராசையா செல்லம்மா

கொக்குவில் பொற்பதி வீதியைச் சேர்ந்த இராசையா செல்லம்மா காலமானார்,

இவர் காலம்சென்ற இராசையாவின் அன்பு மனைவியும், செல்லத்துரை, செல்வராசா, தங்கம்மா, திருமதி மாணிக்கவாசகர் ஆகியோரின் சகோதரியும், முத்துத்தம்பி, அப்புத்துரை, அன்னலட்சுமி ஆகியோரின் மைத்துனியும், மனோன்மணி (ஆசிரியை) யின் அன்புத் தாயாரும், திரு. சி. பொன்னம்பலத்தின் (ஆசிரியர்) அன்பு மாமியாரும், தயாளன், மஞ்சுளா, வனஜா, சசிகரன், குமுதினி ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் ஈமக்கிரியைகள் கொக்குவில் மயானத்தில் இன்று 4-8-90 சனிக்கிழமை நண்பகல் 12 மணியளவில் நடைபெறும். இத்தகவலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:

சிவகுரு பொன்னம்பலம்

பொற்பதி வீதி,
கொக்குவில்.

[13612]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org